பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 11 புதன்கிழமை 24.04.2024 கதிர் 168

இஸ்ரேலுடனான போர்ப் பதற்றத்துக்கு மத்தியில்

# ஒருநாள் பயணமாக இன்று வருகிறார் ஈரான் ஜனாதிபதி

உமா ஓயா திட்டத்தையும் திறந்து வைப்பார்

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை மக்கள் பாவனைக்கான கையளிக்கும் நிகழ்வில்கலந்துகொள்வதற்காக ஈரான் ஜனாதிபதி இப்ரா ஹிம் ரைசி இன்று இலங்கைக்குக்கு வருகைத் தரவுள்ளார்.

ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவின் விசேட அழைப்பின் பேரில், ஈரான் ஜனாதிபதிஒருநாள்உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை வருகிறார், மத்திய கிழக்கில் ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் போர்ப் பதற்றம் நிலவும் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சித் தலைமை தொடர்பாகத் திருகோணமலை நீதிமன்றத்தில் இன்று வழக்கு நடக்க இருக்கும் நிலையில், அந்தத் தேர்தலின்போது தன்னைப்போட்டியிலிருந்து விலகும்படி செய்வதற்கான 'டீல்' குறித்து நாடாளுமன்றஉறுப்பினர்எம்.ஏ.சுமந்திரன் வெளிப்படுத்தியிருக்கிறார்.

தமிழ்இணையஊடகம்ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். 'இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவுக்காக நீங்கள் இருவரும் (சுமந்திரன், சிறீதரன்) நின்றபோது புலம்பெயர் தமிழ் வர்த்தகர் ஒருவர் கட்சி ஒன்றை வழங்குவதாகஉங்கள்இருவருடனும் டீல் பேசினாரா?' - என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே சுமந்திரன் இந்தப் பதிலை வழங்கியிருந்தார்.

சுமந்திரன்மீதுதான்வைத்திருந்த நம்பிக்கையை இழந்துவிட்டார் என்றும் இருவருக்கும் இடையில் தற்போது நிரந்தரமான பிளவு ஏற்பட்டுவிட்டது என்றும் தமிழ் அரசுக்கட்சியின்தலைவராகத் ☞ 2

## நாடாளுமன்றம் இன்று கூடுகிறது

புத்தாண்டுக்குப் பின்னர் நாடாளுமன்றம் இன்று முதல் முறையாக கூடவுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் இன்றும், நாளையும் மற்றும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாக நாடாளுமன்ற தகவல் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், குற்றவியல்நடைமுறைச் சட்டத்திருத்தச்சட்டமூலத்தின்இரண்டாம் வாசிப்புமற்றும்விசம், அபின், ஆபத்தான போதைப்பொருள் கட்டளைச் சட்டத்தின் கீழான கட்டளைகள் மீதான விவாதம் நாளை நடைபெறவுள்ளது.

இதேவேளை, புத்தாண்டின் பின்னர் அமைச்சரவையும் இன்று கூடவுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்திற்கு நீதி அமைச்சினால் இரண்டு புதிய அமைச்சரவைப் பத்திரங்கள்சமர்ப்பிக்கப்படஉள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குற்றச் செயல்களின் மூலம் ☞ 2

## தேசிய மக்கள் சக்திக் கட்சி அரசியலில் துரித வளர்ச்சி

சீன கம்யூனிசக் கட்சி பாராட்டு

தேசிய மக்கள் சக்தி அரசியல்ரீதியில்துரிதமாக வளர்ச்சியடைந்துமக்கள் மத்தியில்பிரபல்யமடைந்துள்ளதாக சீன கம்யூனிசக்கட்சியின்சர்வதேச விவகார திணைக்களத்தின்பிரதிஅமைச்சர் சன் ஹய்ன் தலைமையிலானதூதுக்குழுவினர் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவிடம் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கைக்கு உத்தியோகப்பூர்வவிஜயத்தை மேற்கொண்டுள்ள சீன கம்யூனிச கட்சியின் சர்வதேச விவகார திணைக்களத்தின் பிரதி அமைச்சர் உட்பட தூதுக்குழுவினர் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்கவை மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்தில் நேற்று சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இச்சந்திப்பில் சீன கம்யூனிச கட்சியின் சர்வதேச விவகார திணைக்களத்தின் பிரதி அமைச்சரும் அக்கட்சியின்மத்தியசெயற்குழு உறுப்பினருமான சன் ஹயன்,சீன கம்யூசின கட்சியின் சர்வ தேச விவகார ☞ 8

ஈரான் அதிபரின் வருகையை ஒட்டி

## பாதுகாப்பு ஏற்பாடுகள் கொழும்பில் தீவிரம்

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் இலங்கை வருகையை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்

பொலிஸாரும் முப்படையினரும் இணைந்து பாதுகாப்புநடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

உமா ஓயா பல்நோக்கு திட்டத்தை திறந்து ☞ 2

## சஜித்துடன் விவாதிக்கத் தயார் சவாலை ஏற்றார் அனுர குமார

ஐக்கிய மக்கள் சக்தித் தலைவருடனான விவாதத்திற்கு திகதியை அறிவிக்கும் வகையில், தேசியமக்கள்சக்தி ஐக்கியமக்கள்சக்திக்குகடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

சஜித் பிரேமதாசவிற்கும் அனுர குமார திசாநாயக்கவிற்கும் இடையில் விவாதத்தைநடத்தமுடியுமானசில தினங்களை தேசிய மக்கள் சக்தி அதில் குறிப்பிட்டுள்ளது.

மே 07, 09, 13 அல்லது 14 ஆம் திகதிகளில் இந்த விவாதத்தை நடத்த முடியும் என தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

திகதியை ☞ 8

## பாடசாலை சத்துணவு அரிசித் தரத்தை உறுதிப்படுத்துவதில் மேலும் இறுக்கம்

பாடசாலைகளுக்கு வழங்கப்படும் சத்துணவுக்கான அரசியின் தரத்தை மாகாண மட்டத்தில் மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி அலுவலகத்தின் உலக உணவுத் திட்ட ஒத்துழைப்புக்கான செயலகம் அறிவித்துள்ளது.

கம்பஹா பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்ட நிபுணத்துவகுழுவினால்மனிதப் பாவனைக்கு உகந்ததென உறுதி செய்யப்பட்ட அரிசி மாத்திரமே, பாடசாலை போசாக்குத் திட்டத்திற்காக வெயங்கொடை களஞ்சியத்திலிருந்து பகிர்ந்தளிக்கப் படுவதாகவும் செயலகம் தெரிவித்தது.

அரச பகுப்பாய்வுத் திணைக்களம், வைத்திய ஆராய்ச்சி நிறுவனம்ஆகியவற்றின் அறிக்கைகளை மையப் படுத்தியேமேற்படிஅலுவலகம் இந்தப் பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

அதன்படி பல நிறுவனங்களால் மனித பாவனைக்கு உகந்தது என ☞ 2

சஹ்ரான் தங்கியிருந்தபோது

## சங்கிரிலா ஹோட்டலில் 2 அறைகள் எடுத்துத் தங்கியிருந்த நபர்கள் யார்?

கேள்வி எழுப்புகிறது ஐக்கிய மக்கள் சக்தி

சஹ்ரான் ஹாசிம் சங்கிரிலா ஹோட்டலில் தங்கியிருந்தவேளை 616 மற்றும் 623ஆவது அறைகளில் தங்கியிருந்தவர்கள்யார்எனஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது.

2019 ஏப்பிரல் 21தற்கொலை தாக்குதலில் ஈடுபட்ட சஹ்ரான் ஹாசிமும் அவரது சகா இலாம் அஹமட்டும் 20ஆம் திகதி அதே ஹோட்டலில் சந்தித்த நபர்கள் குறித்த விபரங்களைமூடிமறைப்பதற்கான முயற் சிகள் இடம்பெறுவதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பேச்சாளர் முஜிபூர் ரஹ்மான் இது குறித்த தகவல்களை வெளியிட்டுள்ளார். 2019 ஏப்பிரல் 20 திகதி இரவு இரண்டு தற்கொலை குண்டுதாரிகள் சங்கிரிலா ஹோட்டலின் ஆறாவது மாடியில் உள்ள அறையில் தங்கியிருந்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

அந்த அறையில் தங்கியிருந்த இருவரின் பெயர் விவரங்களை ஹோட்டல் நிர்வாகம் பகிரங்கப்படுத்தமறுக்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு முதல் இரண்டு வாரங்களில் ஹோட்டலில்தங்கியிருந்தவர்களின் விபரங்கள் கொழும்பு உயர்நீதிமன்றத்திடம் வழங்கப்பட்டுள்ள போதிலும் 616ஆம் இலக்க அறையில் தங்கியிருந்தவர்களின் பெயர்விபரங்களை ஹோட்டல்நிர்வாகம் ☞ 2

## ரணில்தான் அடுத்த ஜனாதிபதி அதாவுல்லா உறுதியான முடிவு

ரணில்தான் அடுத்த ஜனாதிபதி என்பது உறுதியானமுடிவுஎன்று தேசிய காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாவுல்லதெரிவித்தார்.

கிண்ணியாவில் நடைபெற்றநிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டின் அடுத்த ஜனாதிபதி யார் என்பது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவிடயமாகும். ஆகையால் இந்த நாட்டின் அடுத்த பிரதமர்யார்என்பதுதான் தற்போதைய பிரச்சினையாக காணப்படுகின்றது.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும்ஜனாதிபதியாக வருவதென்பது ☞ 2

## 5 அரச நிறுவனங்களின் தலைவர்கள் இவ்வாரம் கோப் குழுவுக்கு அழைப்பு

சிறீ லங்கன் ஏர்லைன்ஸ் உட்பட 5 அரச நிறுவனங்களின் தலைவர்கள் இந்த வாரம் கோப் குழுவிற்கு அழைக்கப்பட உள்ளனர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இன்று கோப் குழு முன்னிலையில்அழைக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம் மற்றும் மஹாபொல உயர்கல்வி உதவித்தொகை நிதி என்பன கோப் குழுவின் முன்னிலையில் அழைக்கப்படவுள்ளன.

ஸ்ரீலங்கன் விமான சேவையின் தலைவர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கோப் குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## முறைமை மாற்றத்துக்குத் பொது ஜன பெரமுன தயார்

அது நவீன தலைமுறைக்கான கட்சி என்கிறார் நாமல்

முறைமை மாற்றத்தை (சிஸ்டம் சேஞ்ச்) ஏற்படுத்தும் வேலைத் திட்டத்தினை தொடங்குவதற்கு சிறீ லங்கா பொது ஜன பெரமுன தயாராகவே உள்ளது, அது நவீன தலைமுறைக்கான கட்சி என்று பொது ஜன பெரமுனவின் தேசியஅமைப்பாளரும், ஹம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்

குருநாகல் மாவட்டத்தில் நேற்றையதினம் மஹிந்த ராஜபக்சதலைமையில் நடைபெற்றபொது ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தெரிவுசெய்யப்பட்டவரான சிறீதரன் புலம்பெயர் தமிழ் இணையத் தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார். இதுவரையில் அதற்கு நேரடியாகப் பதிலளித்திருக்காத சுமந்திரன், இந்த நேர்காணலில் தலைவர் போட்டியின்போது புலம்பெயர்தமிழ் முதலாளிகளின்தலையீடு இருந்தது என்பதைவெளிப்படுத்தியிருக்கிறார்.

''எனக்கு ஒருவர் மூலமாகப் புலம்பெயர் தமிழ் வர்த்தகர் ஒருவர் செய்தி அனுப்பியிருந்தார். அதாவது, கட்சிகள் விற்பனைக்கு உண்டு, உங்களுக்கு வேண்டுமா? என்று அந்தப் புலம்பெயர் தமிழ் வர்த்தகர் சார்பாக இன்னொருவர் (எனக்குஆட்களைத் தெரியாது) செய்தி அனுப்பியிருந்தார். உரியவர் என்னுடன்நேரடியாகப்பேசவில்லை என்றபடியால் அந்தப் புலம்பெயர் தமிழ்வர்த்தகரின்பெயரைஎன்னால் பகிரங்கப்படுத்த முடியாது.

என்னைத் தலைவர் தெரிவுப் போட்டியிலிருந்து விலகப் பண்ணுவதற்காகவே என்னுடன் இந்த டீல் பேசப்பட்டது.

புலம்பெயர் தமிழ் வர்த்தகர்கள் தமிழரசுக்கட்சியில்அதிகசெல்வாக்கு செலுத்துகின்றார்கள் என்பது உண்மை. இது இன்று பெரும் பிரச்சினையாக இருக்கின்றது.

இது சம்பந்தமாக, ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் சர்வதேச மட்டத்தில் முக்கிய பதவியை வகித்த ஒருவர், எனக்கு ஒரு செய்தியை அனுப்பியிருந்தார். வடக்கிலும் அரசியலுக்குள் பணம் புகுந்து விட்டது, இது விரும்பத்தக்க விடயம் அல்ல, இதைப்பற்றி நீங்கள் கவனிக்க வேண்டும் என்று அவர் சொல்லியிருந்தார். இப்போது நான் பின்னால்திரும்பிப்பார்க்கின்றபோது பலவிடயங்கள் அப்படிநடக்கின்றன போல்தான் தெரிகின்றன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் எங்கள் கட்சியைச் சேர்ந்த சிலரிடத்தில் எனக்கு எதிராகக்கருத்துக்களைக்கூறுமாறு ஒலிவாங்கிகளைநீட்டிகருத்துக்கள் பெறப்பட்டன. சிலரிடம் அப்படிக் கேட்டபோது அவர்கள் மறுத்தும் உள்ளனர். அதனால்தான் எனக்கு அந்த விடயமே தெரியவந்தது.

சுமந்திரனுக்கு எதிரான கருத்துக்களைச்சொல்வீர்களேயானால் அவர்களின் தேர்தல் பிரசார செலவுகளையெல்லாம் தாங்கள் பொறுப்பேற்பதாக அவர்களிடம் சொல்லப்பட்டிருந்தது. அதற்கமைய சிலர் எனக்கு எதிராகக் கருத்துக்களைக்கூறியிருந்தார்கள். சிலர் எனக்கு எதிராகக் கருத்துக் களைக்கூறமறுத்தும்இருந்தார்கள்.

அப்படியான முயற்சிகள் இன்று கூடுதலாக வலுப்பெற்றுள்ளன. இது தமிழ் மக்களுடைய கொள்கை அரசியல் விடயத்தில் மிகவும் பாதகமான பின் விளைவை ஏற்படுத்தும்.

நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்டபடியால் புலம்பெயர் தமிழ் வர்த்தகர்களிடம் பகிரங்கமாக, தயவு செய்து தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து விலகி இருங்கள் என்று புலம்பெயர் தமிழ் வர்த்தகர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். நீங்கள் செய்யும்வர்த்தகமும்,உங்களுடைய இலாபம் ஈட்டும் வேலையும் வேறு வழிகளில் இருக்கட்டும். தமிழ்த் தேசிய அரசியலுக்குள்தயவுசெய்து நுழையாதீர்கள்.

தமிழ் மக்களின் விடிவுக்கான பயணத்தை அரசியல் பாதையூடாக நாங்கள் முன்னெடுக்கின்றபோது அதற்குள் பணம் உட்செலுத்தப் பட்டால்அதுபெரும்மோசமானபின்னடைவுகளை எங்கள் மக்களிடத்தில் கொண்டுவந்து சேர்க்கும்'' என்று சுமந்திரன் அந்த நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

கட்சிக்குள் பண 'டீல்'கள் நுழைந்துள்ளன என்கிற விடயத்தையும் அவர் நேரடியாகத் தொட்டுச்சென்றுள்ளார் என்றாலும் முழுமையாகவெளிப்படுத்தவில்லை. இது தொடர்பில் சொல்வதற்கு அவரிடம் மேலும் பல சங்கதிகள் இருக்கின்றன என்றே தெரிகின்றது. அதி-லும்தலைவர்தெரிவையொட்டி புலம்பெயர்தமிழ்முதலாளிகளினால் மேற்கொள்ளப்பட்ட பண 'டீல்'கள் பற்றியவிவரங்களும்உண்டுஎன்று அரசல் புரசலாக அறிய முடிந்தது.

கட்சிக்குள் மோதல் வலுக்கும்போதும் வழக்கு மேலும் மேலும் இறுகும்போதும் இன்னும் பலஉண்மைகள்மக்களுக்குத்தெரியவரும்போலத்தான்இருக்கின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஒருநாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தருணத்தில் அவரது பயணம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

2008 ஏப்ரல் மாதத்தில் அப்போதைய ஈரான் ஜனாதிபதி மொஹமட் அஹமதிநெஜாட்டின் இலங்கை வருகைக்குப் பின்னர், ஈரான் ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு வருவது இதுவே முதல் தடவையாகும்.

ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலானஇருதரப்புஉறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் இதன்போதுகைசாத்திடப்படவுள்ளன.

மகாவலி திட்டத்தின் பின்னர், நாட்டின் மிகப்பெரிய நீர்ப்பாசனத் திட்டமாக வரலாற்றில் இணையும் உமாஓயாபல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் ஈரான் மற்றும் இலங்கை ஜனாதிபதிகளின் தலைமையில் இன்றுதிறந்து வைக்கப்படவுள்ளது.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்திதிட்டம்(UOMDP)என்பது இலங்கையின்தேசியமுக்கியத்துவம் வாய்ந்த திட்டமாகும். தென்கிழக்கு பகுதியின் உலர் வலயத்தில் நிலவும் நீர்ப் பற்றாக்குறையைப் தணிப்பதற்காக, சுற்றுச்சூழலுக்கும், நீர் மூலங்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில், உமாஓயாவில் வருடாந்தம் சேரும் 145 கனமீற்றர் நீருக்கு மேலதிகமான நீரை கிரிந்தி ஓயவிற்கு திருப்பிவிடுவதே இத்திட்டத்தின்பிரதானநோக்கமாகும்.

இதன் மூலம் மொனராகலை மாவட்டத்தில் 4500 ஹெக்டயர் புதிய விவசாய நிலங்களுக்கும் தற்போதுள்ள 1500 ஹெக்டயர் விவசாய நிலங்களுக்கும் நீர்ப் பாசன வசதி கிடைக்கும். அத்தோடு பதுளை, மொனராகலை, ஹம்பாந்தோட்டைபிரதேசங்களின் குடிநீர் மற்றும் தொழிற்சாலை நீர் தேவைகளுக்கு 39 மில்லியன் கன மீற்றர் நீரையும் வழங்க முடியும். இதனால்வருடாந்தம் 290 ஜிகாவாட் மின்சாரத்தை தேசிய மின்சாரக் கட்டமைப்பிற்கு வழங்க முடியும்.

இத்திட்டத்தில், பஹல்பொல மற்றும் டயரபா உள்ளிட்ட இரு நீர்த்தேக்கங்களை இணைக்கும் 3.98 கி.மீ நீளமான நீர்ச் சுரங்கம் (இணைப்புசுரங்கப்பாதை), 15.2கி.மீ நீளமான நீரோட்ட சுரங்கப்பாதை, நிலக்கீழ் மின் நிலையம், சுவிட்ச் யார்ட், பயணப் பாதை மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய கட்டுமானங்களும் உள்ளடங்கியுள்ளன.

இலங்கை அரசின் சார்பில் அப்போதையகனியவளஅபிவிருத்தி அமைச்சு மற்றும் ஈரான் குடியரசின் வலுசக்திஅமைச்சுக்கிடையில் 2007 நவம்பர் 27 புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதன்படி, பராப் நிறுவனம் விரிவான சாத்தியக்கூறு ஆய்வுகள், பொறியியல் திட்டமிடல் பொருட்கள், உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் பௌதீக கட்டுமானத்துக்கான கொள்முதல் செயற்பாடுகள், அமைப்பு, பரீட்சித்தல், திட்டத்தை ஆரம்பித்தல் போன்ற செயற்பாடுகனை முன்னெடுத்திருந்தது. 514 மில்லியன் அமெரிக்கடொலர்கள்பெறுமதியான இந்த ஒப்பந்தம் 2010 மார்ச் 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது.

ஈரானின் ஏற்றுமதி மேம்பாட்டு வங்கி 2013 வரை 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியிருந்தது. இருப்பினும், அந்த நேரத்தில் ஈரானுக்கு எதிராக விதிக்கப்பட்ட சர்வதேச தடைகள் காரணமாக அவர்களால் இத்திட்டத்திற்கு தொடர்ந்தும் நிதியளிக்க முடியாமல் போனது. எனவே, அரச நிதியைப் பயன்படுத்தி, ஒப்பந்தக்காரரான பராப் நிறுவனத்துடன், திட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்ல இலங்கை அரசு தீர்மானித்திருந்தது.

இத்திட்டம் 2010 மார்ச் 15 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், 2015 மார்ச் 15 ஆம் திகதி நிறைவு செய்யப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஹெட்ரேஸ் சுரங்கப்பாதையில் எதிர்பாராத விதமாக தண்ணீர் நுழைதமையால் ஏற்பட்ட தொழில்நுட்ப சிக்கல்கள் மற்றும் சமூக பாதிப்புகள், நிதி சவால்கள் உலகளாவிய நெருக்கடிகள் மற்றும் கட்டுமான காலத்தில் ஏற்பட்ட கொவிட் - 19 தொற்று நோய் பரவல் என்பன காரணமாக, திட்டத்தின் நிறைவு திகதி 2024 மார்ச் 31 வரை நீட்டிக்கப்பட்டது. அதேபோல் குறைபாடுகள் மற்றும் உத்தரவாதக் காலமும் 2025 மார்ச் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் இத்திட்டமானது அதன் ஆரம்ப அமுலாக்கக் கட்டத்தை நிறைவு செய்திருந்ததுடன், திட்டத்தின் முதலாம் இரண்டாம் அலகுகள் தேசிய மின் கட்டமைப்புடன் வெற்றிகரமாக இணைக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் சோதனைச் செயல்பாடுகள் 2024 ஏப்ரல் 1 ஆரம்பமாகியிருந்தது.

பண்டாரவளை மற்றும் வெல்லவாயவிற்கு இடையில் தரை மட்ட உயரம் 700 மீற்றர் வித்தியாசத்தை கொண்டுள்ளது. இவ்வாறான உயரத்தில் சுரங்கப் பாதையின் திசையை மாற்றுவது எளிதல்ல. மேலும், விசையாழி ஊடாக நீர் ஊற்ற ஆழமான அழுத்த தண்டு நிர்மானிக்கப்பட்டுள்ளது. இதுபோன்றவடிவமைப்பைஉலகில் வேறு எங்கும் பார்க்க முடியாததால், இதன் நிர்மானப்பணிகள் நிறைவடையும் போது, இது ஒரு அற்புதமான வடிவமைப்பாக இருக்கும்.

பராப் நிறுவனத்திடம் இருந்து இந்த திட்டத்தை பெற்ற பின்னர், நீர்ப்பாசன அமைச்சினால் இந்த திட்டத்தின் செயற்பாட்டாளராக உள்ள இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை மகாவலி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்படும்.

மின்சாரத்தை உற்பத்தி செய்த பின்னர், அந்த நீர் சுரங்கப்பாதை மூலம் கிரிந்தி ஓயாவின் குறுக்கே நிர்மாணிக்கப்பட்டுள்ள அலிகோட்ட ஆர நீர்த்தேக்கத்திற்கு நீர் திருப்பி விடப்படுகிறது.

அதன் பின்னர், அந்த நீர் உமா ஓயாநீர்த்தேக்கத்தின்இடதுகரையில் அமைந்துள்ள இத்திட்டத்தின் கீழ் நீர் கொள்ளளவு மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ள ஹந்தபாணாகலநீர்த்தேக்கத்திற்கும்இத்திட்டத்தின் கீழ் மொனராகலை மாவட்டத்தின் வெல்லவாய, மஹாரகம, தனமல்வில, பலஹருத போன்ற பிரதேசங்களுக்கும் நீர் வழங்குவதற்காக, உமா ஓயாவின் தென் கரையில் நிர்மாணிக்கப்படுகின்ற புதிய குடா ஓயா நீர்த்தேக்கத்திற்கும் திருப்பி விடப்படவுள்ளது.

60 மீற்றருக்கும் அதிகமான நீளம் கொண்ட நீர்ப்பாசன கட்டமைப்பும் நிர்மானிக்கப்பட்டு வருகிறது. இந்த நீர்ப்பாசன முறைகள்மூலம்சிறுமற்றும்பெரும் போகங்களில் தற்போதுள்ள 1500 ஹெக்டெயார் நிலப்பரப்பு மற்றும் புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட 4500 ஹெக்டெயார் நிலங்களுக்கு நீர்ப்பாசனத்துக்கானநீர்வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நேரடிப் பங்களிப்பில் நடைமுறைப் படுத்தப்படும் உமா ஓயாவின் கீழான நீர்த்தேக்க அபிவிருத்தித் திட்டமானது கிரிந்தி ஓயா பள்ளத்தாக்கில் நீண்டகாலமாக நிலவி வந்த நீர்ப் பற்றாக்குறையை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வருவதோடு, பெறப்படும் நீரின் மூலம் அதிகபட்ச பயன்களைப் பெற புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒருங்கிணைந்த விவசாய மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆளும் தரப்பு அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன், பண்டாரவளை மற்றும்வெல்லவாயபிரதேசங்களில் குடிதண்ணீர் மற்றும் கைத்தொழில் தேவைகளுக்கான நீரை வழங்குவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கும் உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் தீர்வுகளை வழங்கியுள்ளது.

ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான முறையான இராஜதந்திர உறவுகள் 1962 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன், முறையான இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்படுவதற்குமுன்பிருந்தே இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகள் பேணப்பட்டுள்ளன.

முந்தைய பாரசீக காலத்தில், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் முக்கியமாக ஹோர்மூஸ் நீரிணை வழியாக நடத்தப்பட்டுள்ளன. ஈரான் தனது தூதரகத்தை 1975 இல் கொழும்பில் ஆரம்பித்ததுடன், இலங்கை தனது தூதரகத்தை ஜனவரி 1990 இல் தெஹ்ரானில் நிறுவியது.

இரு நாடுகளும் அனைத்துத் துறைகளிலும் நெருக்கமான ஒத்துழைப்பைப் பேணுவதுடன், பலதரப்பு உறவுகளில் ஒன்றுக்கொன்று ஒத்துழைக்கின்றன. ஈரானின் அபிவிருத்தி உதவிகள் கடன் வடிவில் வழங்கப்படுவதுடன், பிரதானமாக உட்கட்டமைப்பு வசதிகள், நீர்ப்பாசனம் மற்றும் வலுசக்தி போன்ற துறைகளை மேம்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்துகிறது.

இலங்கை அரசு ஏற்கனவே 19,301,572.6 அமெரிக்க டொலர்களை ஈரானுக்கு திருப்பிச் செலுத்தியுள்ளதுடன், செலுத்த வேண்டிய மீதமுள்ள தொகை ஏறத்தாழ 35,246,022.56 அமெரிக்க டொலர்களாகும். இலங்கையும் ஈரானும்ஐக்கியநாடுகள்சபையிலும் அதன் துணை அமைப்புகளிலும் நெருக்கமாகப் பணியாற்றுவதுடன் இரு நாடுகளுக்கும் பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில்ஒன்றுக்கொன்றுஆதரவளித்து வருகின்றன.

இலங்கையும் ஈரானும் ஆசிய ஒத்துழைப்பு உரையாடல் மற்றும் அணிசேரா அமைப்பு மற்றும் இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கம் உட்பட பல சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புகளில் உறுப்பினர்களாக உள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையில் மஹன் விமான சேவையை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை இணங்கியுள்ளது. மேலும் இது ஈரானிய சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வருவதற்கு ஊக்குவிப்பதோடு சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

2022 இல், இலங்கைக்கு அதிக சர்வதேச சுற்றுலாப் பயணிகள் வருகைதரும்நாடுகளின்பட்டியலில் ஈரான் 27 ஆவது இடத்தைப் பிடித்தது. 2021உடன்ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டுகிறது. 2023 ஜூன் இறுதிக்குள், 5,973 ஈரானியசுற்றுலாப்பயணிகள் இலங்கைக்குவருகைதந்துள்ளனர்.

## பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிப்படுத்தப்பட்ட அரிசி தொகையை, மீள் பரிசோதனை செய்து பெற்றுக்கொள்வதற்காக சுகாதாரஅதிகாரிகள்குழுவொன்றை நியமிக்குமாறு அனைத்து மாகாணச் செயலாளர்களையும் அறிவுறுத்தியிருப்பதாகவும், உலக உணவுத் திட்ட ஒத்துழைப்புக்கான செயலகம் அறிவித்துள்ளது.

இதன்படி, மத்திய களஞ்சியசாலையில் இருந்து அந்தந்த மாகாணங்களுக்கு அரிசியைப் பகிர்ந்தளிக்க முன்னர், மாகாண கல்விக்கு பொறுப்பான தலைமை அதிகாரியொருவர் மற்றும் மாகாண பொதுசுகாதாரபரிசோதகர் உள்ளிட்ட குழுவினரால் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் அரிசி மனித பாவனைக்கு உகந்ததென உறுதி செய்யப்பட வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. முத்திரையுடன்உறுதிப்படுத்தப்படும் அரிசு மாத்திரமே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்காக வழங்கப்படும் உணவின் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் தரத்தை மேலும் மேம்படுத்தும் வகையில், உலக உணவுத் திட்ட ஒத்துழைப்புக்கான செயலகம், உலக உணவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் அரிசியைபாடசாலைகளின்உணவு சமைப்பதற்கு விநியோகிக்கும் முன்பாகபொதுச்சுகாதாரபரிசோதகர் தர நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

அதன்படி சர்வதேச உணவுப் பொதியிடல் தர நியமங்களுக்கு அமைவாக பொதி செய்யப்பட்ட இந்த அரிசி தொகையை மே 31 வரையில் பயன்படுத்த முடியும் என்பதை உலக உணவுத் திட்டம் உறுதி செய்துள்ளது.

இந்த அரிசி உதவித் திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்றது என்பதால் பொதியின் மேற்புறத்தில் விற்பனைக்கு இல்லை எனக் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும், அதனால் அந்த அரிசு மனித பயன்பாட்டிற்கு உகந்தல்ல என பொருள்படாதெனவும் உலக உணவுத் திட்டத்தின் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது. எனவே, சுகாதார துறைக்குள் பல தரப்புக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட சரியான பரிசோதனையின் பின்னரே, அரிசித் தொகையை பகிர்ந்தளிப்பதாக உலக உணவுத்திட்ட ஒத்துழைப்புச் செயலகம் உறுதிப்படுத்தியுள்ளது.

## சங்கிரிலா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அந்த ஹோட்டலின் ஆறாம் மாடியின் மற்றுமொரு அறையில்தங்கியிருந்தவர்களின்விவரங்களையும் ஹோட்டல் நிர்வாகம் நீதிமன்றத்திற்குதெரிவிக்கவில்லை என குறிப்பிட்டுள்ள முஜிபூர் ரஹ்மான் 623ஆம் இலக்க அறையில் தங்கியிருந்தவர்களும் சஹ்ரான் ஹாசிம் குழுவினருடன் தொடர்புபட்டவர்கள் போல தோன்றுகின்றது என குறிப்பிட்டுள்ளார்.

## ரணில்தான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயற்கையானதொருவிடயமாகும். அவர்தான் இந்த நாட்டை நெருக்கடியான நிலைமைகளில் இருந்து மீட்டு ஓரளவாவது இயங்குவதற்கு வழிவகுத்தவர்.

அவ்விதமான நிலையில் இந்த நாட்டைபிறிதொருதலைவரிடத்தில் ஒப்படைப்பதன் ஊடாக மீண்டும் நாடு சீரழிவதற்கு இடமளிக்க முடியாது என்பதில் நாம் உறுதியாக உள்ளோம் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# அரசியல்வாதியை தர்ம தேவதை என்பதா?

## யாழ்;. பல்கலை துணைவேந்தர் கருத்துக்கு மருத்துவர் முரளி வல்லியுரநாதன் கண்டனம்

அரசியல்வாதி ஒருவரை தர்;ம தேவதை எனத் தெரிவித்த யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் கருத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ளார் சமுதாய துறை மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரநாதன்.

இது தொடர்பில் அவரது ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

1989 ஆம் ஆண்டு பேராசிரியர் சுவித்தியானந்தன் ஆயுதக் குழுக்களின் தலையீட்டினால் பதவி நீங்கியதை தொடர்ந்து, தொடர்ச்சியாக உபவேந்தர் நியமனத்திலும் பல்கலைக்கழக நிர்வாக சபையான மூதவை உறுப்பினர்கள் நியமனத்திலும் பல்கலைக்கழக வாசனையே அறியாத ஆயுதக் குழுக்களும் அரசியல்வாதிகளும் ஆதிக்கம் செலுத்தியதோடு, பல சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழகம் என்றால் என்ன என்பதை அறியாத நபர்களையும் போதைப்பொருள் வியாபாரிகளையும் மூதவைக்கு நியமித்து வந்திருக்கின்றன.

துரதிட்டவசமாக உபவேந்தரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதியின் கைகளில் இருப்பதால் கடந்த காலங்களில் தென்பகுதி உபவேந்தர்கள் ஜனாதிபதியின் காலில் விழுந்து ஆசி பெறும் அவலத்தையும், அரசியல்வாதிகளுக்கு சார்பாகக் கேவலமான தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டதையும் அவதானித்தோம்.

இந்தப் பின்புலத்தில், தர்மதேவதை பற்றிப் பல்கலைக்கழகத்தின் அதி உயர் பதவியில் இருக்கும் தாங்கள் தெரிவித்த ஒரு கருத்து இந்துக்களையும் மனித உரிமைக்காக குரல் கொடுப்பவர்களையும் வேதனைப்படுத்தி உள்ளது.

இந்திய ஊடகங்களில் வெளிப்படுத்தப்பட்ட கொலை வழக்குவிவரங்கள் மற்றும் விக்கிலீக்ஸ் மூலம் வெளிப்படுத்தப்பட்ட ஒட்டுக் குழுக்களின் கொலை, கடத்தி சென்று கப்பம் கோருதல் மற்றும் அபலைத் தமிழ் பெண்களை விபச்சாரத்துக்கு உட்படுத்துதல் போன்ற பல அதர்ம செயல்களை கடந்த 4 தசாப்தங்களாக அனுபவித்து வந்திருக்கிறோம்.



சுருக்கமாக சொல்வதானால் ஆயுதப் படையினரினால் இழைக்கப்பட்ட அதர்மங்களை விட ஒட்டுக்குழுக்களின் அதர்மச் செயல்கள் மிகவும் கொடுமையாக இருந்திருக்கின்றன. இந்த சூழ்நிலையில் தர்மதேவதை பற்றிய உங்கள் கருத்து ‘செஞ்சோற்று கடன் தீர்க்க சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்த கர்ணனை’ யே நினைவுபடுத்துகிறது.

வயதெல்லை காரணமாக தங்களது பதவி நிலையின் இறுதித் தவணைக்கு வந்துவிட்ட நீங்கள், ஹாட்லியின் புகழ் பூத்த மைந்தனாக கௌரவமாக இளைப்பாறுவதையே நாங்கள் அனைவரும் எதிர்பார்க்கிறோம்.

எனவே அரசியல்வாதிகளுக்கு மண்டியிடாமல் அவர்களின் துதி பாடுவதை நிறுத்தி அரசியலுக்கு அப்பால் தமிழ் இனத்தின் மேன்மைக்காகவும் நாட்டின் நலனுக்காகவும் செயற்படுமாறு பணிவுடன் கேட்டு கொள்கிறேன். - என்றுள்ளது.(05)

## குப்பைகள் குவிந்து கிடக்கும் மில்லபெத்த மில் ஓயா பகுதி

பஸ்ஸர, மில்லபெத்த பிரதேசத்தில் உள்ள மில் ஓயா பகுதி சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்த்துள்ள அழகான இடமாகும்.

இதனால் இந்தப் பகுதிக்கு பெரும்பாலான மக்கள் வருகை தருகின்றனர். இங்கு வருகை தரும் மக்களின் செயற்பாடுகளால் இந்த அழகான சூழல் தற்போது மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பயன்படுத்திய பிளாஸ்டிக், பொலித்தீன் போன்ற கழிவுப்பொருள்களால் இந்த சுற்றுச்சூழலில் வாழும் மிருகங்களுக்கும் தீங்கும் பாதிப்பும்; ஏற்பட்டுள்ளது.

எனவே இங்கு வருகை தரும் மக்கள் அனைவரும் இந்த சுற்றுச்சூழலைப் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருப்பது மிகவும் அவசியமாகும்.(05)

## தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்றும் போராட்டம்





யாழ்ப்பாணம்-தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

குறித்த சட்டவிரோத விகாரையை அகற்றுமாறு கோரி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர், மக்களுடன் இணைந்து தொடர்ச்சியாக ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தவகையில் நேற்று பௌர்ணமி வழிபாடுகள் விகாரையில் இடம்பெற்ற நிலையில் அதற்கு எதிர்ப்பை வெளிக்காட்டும் முகமாக இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், இது நேற்று (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் நிறைவடைந்தது.

இதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், பொதுமக்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் கலந்துகொண்டுள்ளனர்.(05)

## கல்முனை மாநகர சபை முன்னாள் கணக்காளர் மருதமுனையில் போதைப்பொருள்களுடன் கைது





(பாறுக் ஷிஹான்)

நீண்ட காலமாக போதைப்பொருள் விநியோகம் மற்றும் பயன்பாட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில்கைதான சந்தேகநபரை நீதிமன்றத்தில் சட்டநடவடிக்கைக்காக ஆஜர்படுத்த பெரியநீலாவணை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அண்மையில் ஐஸ் மற்றும் கஞ்சா போதைப் பொருளுடன் மருதமுனை நகரை அண்டிய பகுதியில் கைதான சந்தேக நபர் ஒருவரின் வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்டு பெரிய நீலாவணை பொலிஸார் துரித விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது ஐஸ் போதைப்பொருள் 840 மில்லி கிராம் கேரளா கஞ்சா 4 கிராமும் 540 மில்லி கிராமும் தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் கணக்காளராக பணியாற்றிய 39 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் பெரியநீலாவணை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் குறித்த சந்தே நபர் தொடர்பிலான மேலதிக விசாரணைகளைபெரிய நீலாவணை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்க வழிநடத்தலில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(05)



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தீவிரமாகும் தேர்தல் களம்

அரசுத் தலைவர் தேர்தலையொட்டி தெற்கில் மேலும் பல அரசியல் காட்சிகள் கட்டவிழ்ந்து வருகின்றன. இது இந்த முறை போட்டிமூவருக்குஇடையில்மட்டுமன்றிபலருக்குஇடையிலானதாக மாறி, வாக்குகள் மேலும் சிதறடிக்கப்படுவதற்கான வாய்ப்புகளை விரிவாக்கி வருகின்றன என்றே தோன்றுகின்றது.

தேர்தல் அரங்கில் ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்திக் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் தேசிய மக்கள் சக்திக் கட்சியின் தலைவர் அநுர குமார திஸநாயக்கவும் நிற்பது உறுதியாகிவிட்டது. மறுபுறத்தில் தற்போதைய அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்தப் போட்டிக் களத்தில் இருப்பார் என்று கடுமையாக எதிர்பார்க்கப்படுகின்றது. அது தொடர்பில் உத்தியோகபூர்வமான அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை என்றாலும் போட்டியில் அவரும் இருப்பார் என்றே நம்பப்படுகின்றது. இவர்கள் மூவர் இடையிலுமான மும்முனைப் போட்டியாக இந்தத் தேர்தல் இருக்கும் என்றே பெரும்பாலும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், மற்றொருபோட்டியாளராககளத்துக்குள்நுழைவதில் நீதிஅமைச்சர்விஜயதாசராஜபக்சவும்ஆர்வம்காட்டிவருகின்றார். சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாக அவர் இந்தப் போட்டிக் களத்திற்குள் நுழைவதற்கு முயற்சிக்கிறார். இதனால் சுதந்திரக் கட்சிக்குள் ஒரு தலைமைத்துவ மோதலும் பிளவுகளும் உருவாகியுள்ளன. விஜயதாச ராஜபக்ச தற்போது அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனான அமைச்சரவையில் இருந்தாலும்கூட ரணிலை எதிர்த்துப் போட்டியிடுவதற்கான தனது ஆர்வத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால் இன்னும் உத்தியோகபூர்வமாக அவரும் தனது முடிவை அறிவிக்கவில்லை. இருப்பினும் அதற்கான முதற்கட்டமாக கட்சியின் பதில் தலைவராக ஏட்டிக்குப் போட்டியாக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். கட்சியின் தலைமைப் பதவி மைத்திரிபால சிறீசேனவிடம் இருந்து நீதிமன்றத்தால் பறிக்கப்பட்டதை அடுத்து ஏற்கனவே அமைச்சர் நிமல் சிறீபால டி சில்வா பதில் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

இந்த நால்வர் தவிர ஐந்தாவது நபராக அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடப்போகிறார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்கவின் பெயரும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. தேசிய ஜனநாயக முன்னணியின் சார்பில் அவர் தேர்தலில் நிற்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.கட்சியின் தலைவர் ருவன் மலிந்த இதனைக் கூறியுள்ளார்.

பொது ஜன பெரமுனவின் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக 2020இல் தெரிவான ரொஷான் ரணசிங்க, இராஜாங்க அமைச்சராக முதலில் பணியாற்றினார். 2022ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியை தொடர்ந்து அமைக்கப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஆட்சியில் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சராக செயல்பட்டார். என்றாலும், இலங்கை கிரிக்கெட் சபைக்குள் காணப்படும் அரசியல் தலையீடுகளை நாட்டுக்கு வெளிப்படுத்தியமையால் அவர் ஆளும் தரப்பின் எதிர்ப்பைச் சம்பாதித்தார். அதனால் அமைச்சர் பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்டார்.

இந்த நிலையில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ரொஷான் ரணசிங்க ஆதரவளிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. இருவருக்கும் இடையில் சில ரகசிய சந்திப்புகள் இடம்பெற்றதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. என்றாலும், ரொஷான் ரணசிங்க ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க முயற்சிக்கிறார் என்பது இப்போது உறுதியாகி உள்ளது.


தேசிய ஜனநாயக முன்னணி, ரொஷான் ரணசிங்கவுடன் பேச்சுகளை நடத்தியுள்ளதுடன், தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கத் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளது. ரொஷான் ரணசிங்கவும் அந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளதால் தேசிய ஜனநாயக முன்னணியின் அழைப்பு குறித்து பரிசீலனைகளை நடத்தி வருவதாகவும் அறிய முடிகிறது. இவர்களுக்கு அப்பால் தரைப் படையின் முன்னாள் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் விருப்பத்துடனேயே இருக்கின்றார்.

இப்படிப்பலரும்அரசுத்தலைவர்தேர்தலில்போட்டியிடுவதற்கான முயற்சிகளிலும்ஆர்வத்திலும்உள்ளனர். இவர்களில்எவருக்குமே வெற்றிபெறுவதற்குப் போதுமான மக்கள் ஆதரவு இருப்பதற்கான தெளிவான ஆதாரங்கள் இல்லாதபோதும் தேர்தல் பல முனைப் போட்டியைச் சந்திக்கும் என்பது தெரிவாகின்றது. இந்த நிலை இலங்கையின் அரசியலை புதியதொரு நிலைக்கு எடுத்துச் செல்லும் என்று எதிர்பார்க்கலாம்.

# புத்தகங்கள்: அறிவை உயர்த்தி ஆற்றலைப் பெருக்கும் கருவி

**கலாநிதி என். மாதவன்.**

யாருடைய அறிவையும் உயர்த்தியதாக தம்பட்டம் அடித்துக்கொள்ளாத மேன்மையான குணமுடையவை புத்தகங்கள். ஒவ்வொரு புத்தகமும் சமூக மாற்றத்திற்கு ஆற்றல் அளிக்க வல்லது. புத்தகங்களை உருவாக்கும் மனிதர்களை புரிந்துகொண்டுபுத்தகங்களைமேலும்புரிந்துகொள்ள முயல்வோம்.



செல்வங்கள் கிடைக்கின்றன. பெரும்பாலும் அவர்கள் காலத்தில், அவர்கள் வாழ்ந்த சமூகத்திற்கான சவால்கள் என்னென்ன? அவற்றை எதிர்கொள்ள அவர்கள் பரிந்துரைத்த வழிமுறைகள் என்னென்ன? அந்த வழிவகைகள் மூலம் விளைந்த மாற்றங்கள் என்னென்னஎன்பதாக அவை அமையும்.

சிந்தனையாளர்கள் பரிந்துரைக்கும் சமூக மாற்றங்களில் பெரும்பாலானவை அவர்கள் காலத்துக்குள் நிறைவு பெறுவதில்லை. அவ்வாறு நிறைவுபெற இயலாத கனவு குறித்த சிந்தனைகளை அவர்கள் ஏன் விதைத்து செல்கிறார்கள் என்ற வினா நமக்கு ஏற்படலாம். எந்த ஒரு சமூக சவாலுக்கும் தீர்வு இல்லாமல் இருப்பதில்லை. ஆனால், அதே நேரத்தில் சமூக சவால்களுக்கான தீர்வுகளை யோசிக்க ஒருவர் முனையும்போது அவருக்கு பல முதன்மைத் தகவல்கள் தேவையாக உள்ளன.


அந்த சவால்கள் குறித்து ஏற்கனவே சமூகத்தில் உள்ள புரிதல் என்ன? அந்த சவால்களுக்கு தீர்வு காண மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்னென்ன? அந்த நடவடிக்கைகளில் ஏற்பட்ட வெற்றி அல்லது தோல்வியின் விவரங்கள். தோல்வி என்றால் தோல்விக்கான காரணிகள் இப்படியாக அவற்றைப் பட்டியலிடலாம்.

இந்தப்பட்டியலில்பலவற்றைசிந்தனையாளர்கள் எழுத்தில் வடித்துவைத்துவிட்டுச் செல்கின்றனர். இதனால் அதே சவால் குறித்துப் புதிதாக சிந்திக்கும் ஒருவரது பணி மிகவும் எளிதாகிறது. முந்தைய தலைமுறையினரின் பலதரப்பட்ட அனுபவங்களோடு சவாலை அணுகுகின்றனர். இதனால் சவாலுக்கான தீர்வுகளை அவர்கள் விரைவாகக் கண்டறிகின்றனர். இவ்வாறு அவர்கள் புதிதாக முயலாமல் ஏற்கெனவே உள்ள தீர்வுகளிலின் அடிப்படையில் அணுகுவது என்பது எளிதாக இருக்கிறது.

சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் வைத்து மனிதர்களை எளிதாகப் புரிந்து கொள்ள இயலும். இவ்வாறான புரிதலின் அடிப்படையில் சமூகவியலாளர்கள் நான்கு விதமாக மனிதர்களை வகைப்படுத்துகின்றனர். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருந்துகொண்டு தனது குடும்பமே உலகம் என்று வாழ்வோர் ஒரு வகை. சமூக மாற்றத்தைப் பற்றி என்னால் ஓரளவு யோசிக்க முடியும் ஆனால் கூடுதலாக யோசிக்க முடியவில்லை என்று ஆதங்கம் கொண்டோர் இரண்டாவது வகை.

என்னால் யோசிக்கவும் இயலும், அதனைப் புத்தகமாக வடிக்கவும் இயலும் என்போர் மூன்றாவது வகை. என்னால் சிந்தனைகளாக வடிக்கவும் இயலும் சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கொடுக்கவும் இயலும் என்போர் நான்காவது வகையினர் என்கின்றனர்.

முதலாவது வகையினர் தமது குடும்பம் பற்றிய சிந்தனைகளிலிருந்து வெளிவந்து பலரோடு இணைந்து பழகவேண்டும். முதல் கட்டமாக உறவினர்களுடன் கலந்துபேசி அவர்களது பழகும் வட்டத்தைப்பெரிதாக்க முயலலாம். இரண்டாவது வகையினர் மேலும் ஆழமாக யோசிப்பதற்கான பணியை புத்தகங்களை வாசிப்பதன் மூலம்



தொடங்கலாம்.

கருத்துகளை மட்டும் வழங்கிக்கொண்டிருக்கும் மூன்றாவது வகையினர், சமூக மாற்றத்திற்கான சிறு சிறு செயல்பாடுகளில் ஈடுபட்டு நான்காவது வகையினராகப் பரிணமிக்க முயல வேண்டும். நான்காவது வகையினராக இருப்போர் தமது செயல்பாட்டினால் தாம் சந்தித்த சவால்களைப் பதிந்துவைக்கலாம். சமூக இயங்கியலில் பெரும் அமைப்பாகச்செயல்படுவோர்தமதுஉறுப்பினர்களை இவ்வாறாக வகைப்படுத்தி தமது அமைப்பையும் பலப்படுத்திக்கொள்ளலாம். .

இவ்வாறான திட்டமிடல்கள் ஏதும் இல்லாமலே புத்தகங்கள்என்னும்அறிவுச்சுரங்கங்களைஅந்தந்த காலகட்டங்களின் வாழும் சிந்தனையாளர்கள் உருவாக்குகின்றனர். அவற்றின் மூலம் அவர்கள் தாம் வாழும் காலத்திற்குப் பின்னரும் நினைவுகூரப்படுகின்றனர். அவ்வாறே இன்றைக்குப் பலரும் வரலாறாகி வாழ்கின்றனர்.

உலகில் பிறந்து வாழ்ந்து மடிந்த அனைவரையும் வரலாறுநினைவில்வைத்திருப்பதில்லை. வரலாற்றில் இடம் பிடிப்போரில் சிலர் தலைவர்களாக வாழ்ந்து மறைகிறார்கள். சிலர் சமூக சிந்தனையாளர்களாக கருத்துக்களை விதைத்துச்செல்கிறார்கள். அவர்களது மாணவர்கள் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு அவற்றைக் கடத்துகின்றனர்.

பெரும்பாலான சமூக சிந்தனையாளர்கள் தமது சிந்தனைகளை எழுத்திலும் விட்டுச் செல்கின்றனர். அப்போது சமூகத்திற்கு அளவற்ற சிந்தனைச்

சிந்தனையாளர்களின்எழுத்துகளைகாலந்தோறும் பாதுகாப்புப் பெட்டகமாக்கி நமக்கு அளிக்கக்கூடிய அரும்பணியைபுத்தகங்கள்செய்கின்றன. ஒவ்வொரு சிறந்த புத்தகமும் பல்வேறு புதுப்புது அர்த்தங்களை, புதுப்புது வடிகால்களை அளிப்பதாகவே உள்ளது. அவ்வாறுதான் ஒவ்வொரு புத்தகத்தின் பக்கங்களிலும் இருக்கக்கூடிய சிந்தனைகளை ஒரு மனிதன் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு கட்டத்திலும் வாழும் மனிதர்கள் மனிதவளத்தை அடுத்த கட்டத்தினை நோக்கி நகர்த்த முனையவேண்டும். இதற்கு ஒரு மிகப்பெரிய சமூக இயக்கம் தேவைப்படுகிறது. அந்த சமூக இயக்கத்தை கட்டமைக்கும் பணியைப் பள்ளிக்கூடங்கள் செய்யலாம். ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்கள் குழந்தைகளின் எதிர்கால வேலைவாய்ப்புக்கான முகமை என்பது போல மாறிவருகின்றன.

ஆனால், ஒவ்வோர் ஊரிலும் ஒரு நூலகம் இருந்து இந்தப் பணியை செய்ய முன்வருமானால் நிச்சயமாக நல்ல பலன் கிடைக்கும். உலக புத்தக நாளில் இந்த புரிதல் மேம்பட அனைவரும் கூட்டாகச் சிந்திப்போம். புத்தகங்களே சமூகத்தின் அறிவுநிலையை உயர்த்தி ஆற்றலைப் பெருக்கும் கருவிகள். இந்தக் கருவிகளின் பயன்பாட்டில் ஆரோக்கியமான மாற்றங்கள் ஏற்படாமல் மனிதவள மேம்பாட்டில் மாற்றம் ஏற்படுவதென்பது சாத்தியமில்லை.

**நேற்று (ஏப். 23) உலக புத்தக நாள்.**

காலைக்கதிர் Kalaikkathir

# ஐஸ் போதைப்பொருளுடன் ஐவர் பத்தரமுல்லை விடுதியில் கைது

பத்தரமுல்லை பகுதியில் 650 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பத்தரமுல்லை பகுதியிலுள்ள விடுதியொன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் போதைப்பொருளுடன் கைதாகினர்.

கைது செய்யப்பட்டவர்களில் இரண்டுபெண்களும்அடங்குகின்றனர் எனவும், அவர்கள் நீர்கொழும்பு மற்றும் கட்டான பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்பதுடன் ஏனைய மூன்று சந்தேகநபர்களும் கொழும்பு மற்றும் எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்தவர்கள்எனத்தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் போதைப் பொருள்களுடன் மேலதிக விசாரணைகளுக்காக தலங்கம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்படவுள்ளனர்.(05)

# புதையல் தோண்டிய ஐவர் திகவாபியில் கைதாகினர்

திகவாபி, வெஹெரகல பிரதேசத்தில் புதையல் தோண்டிய ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் .

கைதானவர்கள் சம்மாந்துறை, கொக்கட்டிச்சோலை மற்றும் அம்பாறை பகுதிகளை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்கள் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (05)

# பதுளையில் வீடுகளுடைத்து திருடும் கும்பல் கைதாகியது

பதுளைபொலிஸ்பிரிவுக்குஉட்பட்ட பகுதிகளில்உள்ளவீடுகளைஉடைத்து பெறுமதியான பொருள்களைத் திருடும் ஏழு பேரைக் கொண்ட திருட்டு கும்பல் ஒன்று 20 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளது.

பதுளை பிரதேசத்தில் உள்ள வீடுகளை உடைத்து பெறுமதியான பொருள்களைத் திருடுவதாக பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஸ்பிரிங்வெலி, கட்டுபெலெல்ல, ரிதிபான , கதன ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 25 முதல் 30 வயதுக்குட்பட்டவர்களாவர்.

இதனையடுத்து சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் பல்வேறு பிரதேசங்களில் திருடப்பட்டதாகக் கூறப்படும் குளிர்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம், மடிக்கணினி, பித்தளைவிளக்கு, பித்தளைபூந்தொட்டி மற்றும் பல மின்சாதனப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்நிலையில் , திருடிய பொருள்களைக் கொள்வனவு செய்ததாகக் கூறப்படும் 31 வயது சந்தேக நபரொருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.(05)

# பொத்துவிலில் பலர் மக்கள் காங்கிரஸில் இருப்பது கட்சிக்கு மேலும் பலம் சேர்ப்பதாக அமைகின்றது

## ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

(ஹஸ்னி அஹமட்)



பொத்துவில் பிரதேசத்தில் உள்ள மூத்த அரசியல்வாதிகளும், சமூக சேவையாளர்களும் புதிதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்திருப்பது கட்சிக்குமேலும்பலம்சேர்த்திருக்கிறது என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின்தலைவரும்நாடாளுமன்றஉறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

பொத்துவிலில் இடம்பெற்றஊடகவியலாளர்சந்திப்பின்போதுஉரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி குறுகிய காலத்தில் உருவாகி சமூகத்திற்காக நல்ல பல பணிகளைச் செய்த ஒரு கட்சியாகும். கடந்த நான்கு வருடங்கள் இந்த கட்சியும், தலைமையும் பல இன்னல்களை சந்தித்தது. கட்சியின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியோடு இல்லாமல் கட்சிக்கும் தலைமைக்கும் துரோகம் இழைத்துவிட்டு சென்றதால் தலைமை மாத்திரம் கட்சியோடு இருக்கின்ற துர்ப்பாக்கிய நிலை கட்சிக்கு ஏற்பட்டது.

ஆனால் கட்சியின் ஆதரவாளர்கள் இந்தக் கட்சியோடுதான் இருக்கின்றனர். இன்று கட்சியோடு புதிதாக பலர் இணைந்திருக்கின்றமை கட்சிக்கு மேலும் பலமாக பார்க்கிறோம். எதிர்காலத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியோடு இணைந்து செயற்படுவதற்கு நாடு பூராகவும் பலர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பொத்துவில் மக்களும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியோடுதான் இருக்கின்றனர். இவ்வாறான சூழ்நிலையில் அப்பிரதேசத்தில் உள்ள மூத்த அரசியல்வாதிகளும், தேர்தல்களில் போட்டியிட்டவர்களும், அரசியல் ரீதியாக பொறுப்பு மிக்க பதவிகளை வகித்தவர்களும் இன்று எம்மோடு இணைந்திருப்பது இக்கட்சிக்கு மேலும் வலுச்சேர்த்திருக்கிறது.

எதிர்வரும் காலங்களில் இந்தக் கட்சியின் ஊடாக பதவிகளைப் பெறுகின்றவர்கள் பொத்துவில் மண்ணுக்கும் மக்களுக்கும் பல்வேறு பணிகளை மேற்கொள்வார்கள் என்ற நம்பிக்கை கட்சிக்கும் தலைமைக்கும் உள்ளது. - என்றார். (05)

# நாட்டில் பயணிகள் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களுக்கு மீற்றர் கட்டாயமாம்

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் பயணிகள் சேவையில் ஈடுபடும் ஓட்;டோக்களுக்கு மீற்றர் பொருத்தப்பட வேண்டும் என்றும் இந்தச் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் எனவும் மேல் மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் ஓட்டோக்களின் மேல் இடது மூலையில் பயணிகள் பார்க்கக் கூடிய வகையில் கட்டணத்தை காட்டும் மீற்றர் பொருத்துவது கட்டாயம் என்றும் அதிகார சபை கூறுகிறது.

கையடக்கத் தொலைபேசி மீற்றர்கள் மூலம் பயணிகளிடம் கட்டணம் வசூலிக்கும் ஓட்டோக்கள் தொடர்பில் 011-2860860 என்ற முறைப்பாட்டு இலக்கத்துக்கு முறைப்பாடு செய்யுமாறும் அதிகார சபை மக்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டது. (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# தொடருந்து திணைக்களத்தின் பொது முகாமையாளர் இறப்பு



ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் எச்.எம்.கே. டபிள்யூ.பண்டார நேற்று (செவ் வாய்கிழமை) காலை காலமாகியுள்ளார்.

இவர் திடீர் சுகவீனம் காரணமாக அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மாத்தளைவிஞ்ஞானக் கல்லூரியின் பழைய மாண வரான இவர் தனது உயர் கல்வியை பேராதனை மற்றும் மொரட்டுவை ஆகிய பல்கலைக்கழகங்களில் நிறைவு செய்து பொறியியலாளராக தனது தொழிலை ஆரம்பித்துள்ளார்.

ரயில்வே திணைக்களத்தின் தலைமைப் பொறியியலாளர் மற்றும் உட்கட்டமைப்பு பொது முகாமையாளர் உள்ளிட்ட பல உயர் பதவிகளையும் இவர் வகித்துள்ளார்.(05)

# அரசின் இலவச 10 கிலோ அரிசி கிண்ணியாவிலும் வழங்கல்

(ஹஸ்பர் ஏ.எச்)

அரசாங்கத்தின் குறைந்த வருமானம்பெறும்குடும்பங்களுக்கான அரிசி வழங்கும் திட்டம் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று (செவ்வாய்க்கிழமை)இடம்பெற்றது.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச். ஹனி தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல். எம்அதாவுல்லா கலந்துகொண்டு அரிசி பொதிகளை வழங்கி வைத்தார்.

10கிலோகிராம்எடைகொண்டஅரிசி பொதிஒவ்வொருகுடும்பங்களும்வழங்கி வைக்கப்பட்டன. இதில் 220 குடும்பங் களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. (05)

# பாக்கு நீரிணையை நீதிக் கடக்க முயன்றவர் நடுக்கடலில் சாவு




பாக்குநீரிணையைகடக்கமுயன்றஇந்தியாவைச் சேர்ந்த முதியவர் நடுக்கடலில் நெஞ்சு வலி காரண மாக உயிரிழந்தார்.

இலங்கையில்தலைமன்னார்முதல்இந்தியாவில் தனுஷ்கோடி வரை உள்ள 30 கிலோமீற்றர் தூரம் பாக்கு நீரிணை கடல் பகுதியை சமீப காலமாக வெளியூர் மற்றும் வெளி மாநிலங்களை சேர்ந்த பல நீச்சல் வீரர்கள் நீந்தி கடந்து சாதனை படைத்து வருகின்றனர்.

இந்நிலையில், தலைமன்னார்முதல்தனுஷ்கோடி அரிச்சல் முனை வரை நீந்தி கடப்பதற்கு இந்திய, இலங்கை இருநாட்டு அரசாங்கத்திடம் உரிய அனுமதி பெற்று திங்கட்கிழமை 31 பேர் கொண்ட குழு ராமேஸ்வரத்தில் இருந்து படகு மூலம் புறப்பட்டு தலைமன்னார் வந்தடைந்தனர்.

இங்கிருந்து நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை சுமார் 12.10 மணி அளவில் கடலில் குதித்து தொடர் ஓட்டம் முறையில் நீந்தத் தொடங்கினர்.

அப்போது சரியாக மூன்று மணி அளவில் தொடர் ஓட்ட நீந்துதலில் மூன்றாவது இடத்தில் இருந்த பெங்களூரைச் சேர்ந்த கோபால் ராவ் (வயது 78) என்பவருக்கு திடீரென நடுக்கடலில் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து அவரை பரிசோதித்த மருத்துவக் குழு மாரடைப்பு காரணமாக கோபால் ராவ் உயிரிழந்ததை உறுதிப்படுத்தினர்.

இதனையடுத்து, கோபால்ராவ் உடல் தனுஷ்கோடி பாலம் மீன்பிடித்துறைமுகத்திற்கு எடுத்து செல்லப்பட்டு பின்னர் உடற்கூறு ஆய்வுக்காக ராமேஸ்வரத்திலுள்ள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

உடன் வந்த நபர் ஒருவர் உயிரிழந்ததால் 30 பேரும் மன்னார் முதல் தனுஷ்கோடி அரிச்சல் முனை வரை நீந்தி கடந்து சாதனை படைக்கும் நிகழ்வைக் கைவிட்டனர்.

கோபால் ராவ் உயிரிழந்தமை தொடர்பாக ராமேஸ்வரம் நரைன் பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## சஜித்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானித்த பின்னர் எந்த நேரம், எவ்வளவுநேரம்விவாதம்நடத்துவது, இடம் மற்றும் ஒளிபரப்பு செய்யும் அலைவரிசையை தீர்மானிக்க முடியும்எனதேசியமக்கள்சக்தியின் இந்த விவாதம் தொடர்பிலான இணைப்பாளர் டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸவின் கையொப்பத்துடன் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கியமக்கள்சக்திஇந்தவிவாதத் திற்கு இணாங்கவில்லையென்றால், அது தொடர்பில் விரைவில் அறிக்கு மாறும் கடிதத்தில்கோரப்பட்டுள்ளது.

இந்நிலையில், வீரகெட்டியவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் தேசிய மக்கள் சக்தியின் அழைப்பிற்கு சஜித் பிரேமதாச பதிலளித்தார்.

கடிதம் எழுத வேண்டிய தேவை யில்லை எனவும் மே மாதத்தில் இரண்டு விவாதங்களுக்கும் தாம் தயார்எனவும்எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டார்.

பொருளாதார வல்லுநர்கள் மற்றும் தலைவர்களுக்கு இடையிலான இரண்டு விவாதங் களுக்கும் தாம் தயாராக இருக்கிறார் என்று அவர் கூறியுள்ளார்.

இதிலிருந்து தப்பி ஓடாமல், இரண்டு சவால்களையும் ஏற்றுக்கொள்ளுமாறும், கோழை களாகதப்பித்துஓடாது, விவாதத்திற்கு வருமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாசஅழைப்புவிடுத்தார்.

பொருளாதார குழுவினருக் கிடையிலான விவாதத்திற்கு அச்சமா எனவும், போதிய அறிவு இல்லையா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். எனவே, கடிதம் அனுப்பாமல் மே மாதம் இரு விவாதங்களுக்கும் வருமாறு எதிர்கட்சி தலைவர் தேசிய மக்கள் சக்தியினரை அழைத்துள்ளார்.

## தேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தின்பிரதிபணிப்பாளர் நாயகம் லின் தோ,கொழும்பில் உள்ளசீனதூதரகத்தின்கவுன்ஸிலர் சென் சியன்ஜியான்,

சீன கம்யூனிச கட்சியின் சா்வதேசவிவகாரதிணைக்களத்தின் பணிப்பாளர் லி ஜின்யன்,பிரதி பணிப்பாளர் வென் ஜின்,பிரதி அமைச்சின் செயலாளர் ஜின் வன்,கொழும்பில் உள்ள சீன தூதரகத்தின்இரண்டாம்செயலர்ஜின் என்ஸ்மற்றும்மொழிப்பெயர்ப்பாளர் சாங் குயு ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய நிறைவேற்றுகுழுஉறுப்பினர்களான பாராளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத்,கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் பேராசிரியர் சுனில்ஜயந்தபெர்னாண்டோ,சுனில் அதுன்னெத்தி ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

இச்சந்திப்பின் போது தற் போதைய அரசியல் நிலைவ ரம்,இடம்பெறவுள்ள தேசிய தேர் தல்கள்,பொருளாதார மற்றும் சமூக மீட்சி உள்ளிட்ட விடயங்கள் குறித்து பேசப்பட்டன.

தேசிய மக்கள் சக்தி அரசியல் ரீதியில் துரிதமாக வளர்ச்சி யடைந்து மக்கள் மத்தியில் பிரபல்ய மடைந்துள்ளதாக சீன தூதுக் குழுவினர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

சீன கம்யூனிச கட்சியுடனான இருதரப்பு ஒத்துழைப்பு,சமூக கலாசார தொடர்பாடல் மற்றும் சர்வதேச உறவு என்பன தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தில் பலப்படுத்துவதற் கும்,பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவது தொடர் பிலும் இரு தரப்பிலும் கலந்துரை யாடப்பட்டுள்ளது.

## முறைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனபெரமுனவின்ஒருங்கிணைப்பு அலுவலகத்தினை மீளத் திறந்து வைக்கும்நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித் ததாவது:

எனதுதாத்தாவின்கல்லறையை சேதப்படுத்தினார்கள். நாம்வாழ்ந்த எமதுவீட்டுக்குத்தீவைத்தனர். அந்த வெறுப்பைஎமதுபிள்ளைகளுக்கும் வழங்குவதால் எந்தவிதமான பயன்களும் இல்லை. தவறாக வழிநடத்துவதுமிகவும்இலகுவான விடயமாகும். அதேபோல தற்போதைய தலைமுறையின ருக்குயதார்த்தத்தினைதெளிவுபடுத் துவதும் இலகுவான விடயமாகும்.

தற்போதைய இளம் தலை வர்கள் மிகச் சிறந்த புத்திசாலிகள். உலகத்தை திறந்த மனதுடன் அவர்கள் பார்ப்பதற்கான சந்தர்ப்பத்தினையும், சூழ லையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதுவேஎமதுகட்சியின் கொள்கையாகும். நவீனமயப் படுத்தப்பட்ட பயணத்தினை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க் கின்றோம்.

(சிஸ்டம் சோஞ்) முறைமை மாற்றம் தொடர்பில் கடந்த காலங்களில் அதிகம் பேசப்பட்டது. அந்த மாற்றத்தினை ஏற்படுத்தும் வேலைத் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன தயாராகவே உள்ளது. பொது ஜன பெரமுன நவீன தலைமுறைக்கான கட்சி என்று கருதுகின்றேன் என்றார்.

# இலங்கை மின்சார ஊழியர் சங்கத்தின் ஆர்ப்பாட்டத்துக்கு நீதிமன்றம் தடை

இலங்கை மின்சார ஊழியர் சங்கம் இன்று (புதன்கிழமை) நடத்தவிருந்த ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக பொலிஸார் நீதிமன்ற உத்தரவைப் பெற்றுள்ளனர்.

வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொதுமக்கள் மற்றும் பாதசாரிகளுக்கு இடையூறாக எந்தவொரு வீதியையும் கடக்க வேண்டாம் எனவும், பொல்துவ சுற்றுவட்டத்தை சுற்றி ஆர்ப்பாட்டம் அல்லது வன்முறையில் ஈடுபட வேண்டாம் எனவும் உத்தரவிடப் பட்டுள்ளதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது . (05)

# கல்முனையில் பண்டிகைக்கால உள்ளக விளையாட்டு நிகழ்வுகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் ஈஸ்டர், நோன்புப்பெருநாள் மற்றும் தமிழ் சிங்கள புத்தாண்டைச் சிறப்பிக்கும் வகையில்' தித்திக் கும் திருவிழாக்கள்' எனும் தலைப் பில் உள்ளகவிளையாட்டுநிகழ்வுக ளும் கலை கலாசார நிகழ்வுக ளும்பணிமனையின்நலன்புரிச்சங் கத்தின் ஏற்பாட்டில் சுகாதார சேவைகள்பணிப்பாளர்வைத்தியர் சகீலாஇஸ்ஸதீன்ஆலோசனையின் பேரில் நடைபெற்றது.(05)




# ஜனாதிபதியின் திட்டத்துக்கு அமைய வடக்கிற்கு 50 ஆயிரம் சோலர் பனல் வீட்டுத் திட்டம் கிட்டும்

## இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் உறுதி

ஜனாதிபதியின் திட்டத்திற்கு அமைய வடக்கிற்கு 50 ஆயிரம் சோலர் பவர் வீட்டுத் திட்டங்கள்வழங்கப்படவுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சர்களின் பெயரை பயன்படுத்தி வீட்டுதிட்டம், காணி தருவதாக யாராவது பணம் பெற்றால் முறைப்பாடு செய்யுங்கள் என கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

வவுனியா, கண்டி வீதியில் உள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்தொடர்ந்தும்கருத்துதெரிவிக்கையில் –

யுத்தம்முடிவடைந்தபின்பும்எமதுமக்களின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு என்பன கனவு போன்றே இருந்தது. இது சம்பந்தமாக பல அமைச்சர்கள் செயற்பட்டிருந்தாலும் அது பூரணப்படுத்தப்படவில்லை.எமதுமாவட்டத்தின் வீட்டுத் திட்ட தேவை, உட்கட்டமைப்பு வசதிகளின்தேவை, வீதிபுனரமைப்புஉள்ளிட்ட பல்வேறு தேவைப்பாடுகள் தொடர்பாக நாம் ஜனாதிபதியிடம்தொடர்ச்சியாககூறிவந்தோம். இந்நிலையில் கடந்த காலங்களில் பல்வேறு வீட்டுத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது போன்று தற்போது வடக்கிற்கு சோலர் பனர் வீட்டுத்திட்டம்நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

பயனாளிகளுக்கு 35 லட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத் திட்டம் இதன் மூலம் கிடைக்கவுள்ளது. வடக்கு மாகாணத்திற்கு 25 ஆயிரம் வீட்டுத்திட்டம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த நிலையில், தற்போதுஅதனை50ஆயிரம்வீட்டுத்திட்டமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட மட்டத்தில் எடுக்கப்பட்ட தகவல்கள் 25 ஆயிரத்தையும் கடந்து சென்றதால் 50 ஆயிரம் வீட்டுத்திட்டம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வடக்கில் வீடற்ற எவரும் இனி இருக்க முடியாது. உப குடும்பங்கள் அனைவருக்குமே இதன் மூலம் வீட்டுத்திட்டம் கிடைக்கும்.

வீட்டுத்திட்டம் மட்டுமன்றி எமது மாவட்ட மக்களுக்கான மின்சார இணைப்புக்கள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பாக நாம் மக்களிடம் இருந்தும், பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகம் ஊடாகவும் தகவல்களைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றோம். பொது இடங்கள் மற்றும் மக்களுக்கான மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று, மக்களது குடிநீர் இணைப்புக்களை வழங்க முதல் கட்டமாக வவுனியா மாவட்டத்திற்கு 5000 பேருக்கும், மன்னார் மாவட்டத்திற்கு 1500 பேருக்கும், முல்லைத்தீவுமாவட்டத்திற்கு5000பேருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மின்சார இணைப்பு மன்னார் மாவட்டத்திற்கு 2500 உம், வவுனியா மாவட்டத்திற்கு 1500 உம், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 1500 உம் வழங்கப்பட்டு வருகின்றது. கிராம மட்ட தேவைகள் குறித்து நாங்கள் ஜனாதிபதிக்கு தெரிவித்து விசேட நிதியைப் பெற்று இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

சில கிராம மக்களுக்கு இத் தகவல்கள் கிடைக்கவில்லை. மின்சாரம், நீர் இணைப்பு இல்லாதவர்கள் உங்கள் பகுதி உத்தியோகத்தர்களுடன்தொடர்புகொள்ளவும். அல்லது எமக்கு தெரியப்படுத்தவும். பொது வீதிகளுக்கான மின்சார இணைப்பும் வழங்கப்படுகிறது. எமது மக்களுக்கு எது தேவையோ அதனை செய்வதற்கு ஜனாதிபதி அவர்கள் தயாராக இருக்கின்றார். கேட்டுப் பெற வேண்டியது எங்களது பொறுப்பு. மாவட்ட மட்டத்தில் 1000 பேருக்கு பாரிய வாகனங்களை இயக்குவதற்கான பயற்சி வழங்கி சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக பொது அமைப்புக்களும் இளைஞர்களை வழிப்படுத்தி அவர்கள் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெறக் கூடிய நிலையை உருக்வாக்க முன்வர வேண்டும்.

இதேபோன்று, பல கிராமங்களில் காணிகள்வன இலாகா சார்ந்த பிரச்சினையாக இருக்கிறது. அதனை விடுவிக்க தொடர் நடைவடிக்கை இடம்பெறுகின்றது. நான் கடந்த காலங்களில் 3 ஜனாதிபதிகளுடன் பணியாற்றி இருக்கின்றேன். ஆனால் கடந்த காலத்தில் இருந்த இரு ஜனாதிபதிகள் வனஇலாகாவிடம் இருந்து காணிகளை விடுவிக்க பூரண கரிசனை காட்டவில்லை. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள்அதனைவிடுவிக்கதுரிதநடவடிக்கை எடுத்துள்ளார்.

தேசிய ரீதியில் காணி விடுவிப்புக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இரண்டு மாதங்களில் பல காணிகள் விடுவிக்கப்படும். விடுவிப்பதற்கான காணிகளின் விவரம் வந்துள்ளது. இதன் மூலம் காணி இல்லாத மக்களுக்கு அதே கிராமங்களில் காணிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படபட்டுள்ளது. அவர்களது கிராமத்தில் காணி இல்லாதுவிடின் அயல் கிராமத்தில் காணியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குடியிருப்பதற்கான நிலம் மற்றும் விவசாய நிலம் என்பன வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிலர் சில பகுதிகளில் ஏக்கர் கணக்கில் காணிகளை அடாத்தாக பிடித்து



வைத்துள்ளார்கள். அதனை மீட்டு பொது மக்களக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் பொதுவாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. சிலர் தற்போது அந்த அமைச்சர், அந்த எம்.பி என சொல்லி காணி எடுத்து தருவதாக கிராமங்களில் பணம் பெறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு பல முகவர்கள் நிதி பெறுவதாகக் கூறப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகளுக்கு எமது பெயரையோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் பயன்படுத்தப்பட்டால் முறைப்பாடு செய்யுங்கள் நடவடிக்கை எடுக்கப்படும். அரசசேவைகளை வழங்குவதற்கு எந்தப் பணமும் அறவிடப்பட முடியாது. நாங்கள் மக்களது சேவையாளர்கள். மக்களிடம் பணம் பெற்று தான் அவர்களுக்கு சேவை வழங்கும் கலாசாரம் இல்லை. வன்னியில் அவ்வாறு நடைபெறக் கூடாது.

ஒரு காணிக்கு 15 நாளில் ஆவணம் தருவதாகவும்பணம்பெறப்படுகிறது. வவுனியா ஊடகவியலாளர்கள் தமது குடியிருப்பு காணி பெற எத்தனை வருடமாக போராடுகிறார்கள். ஆனால் 15 நாளில் ஆவணத்துடன் காணி எவ்வாறு சாத்தியம். இவ்வாறு பொய்யான கதைகளைக் கூறி பாமர மக்களிடம் பணம் பெற்று ஏமாற்றுகிறார்கள்.

நாமும் காணிப் பிரச்சினை, குளப் பிரச்சினை என அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்டு வருகின்றோம். போய் பார்வையிடுவதும் கதைப்பதும் தான் முகப் புத்தகங்களில் வருகிறது. அதற்கு என்ன நடந்தது என்பது பிறகு வருவதில்லை. அதற்கு என்ன நடந்தது என்ற தகவலைக் கேளுங்கள். மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். ஒரு நபர் 70 ஏக்கர் காணிகளை பிடித்து வெளிநாட்டில் உள்ள நபர் ஒருவருக்கு கொடுத்துள்ளார் என அமைப்பு ஒன்று சுட்டிக் காட்டியுள்ளது. இது தொடர்பாக பிரதேச செயலாளரிடம் முறையிட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதுபோல், எம்மை சந்திக்கும் பலர் எம்முடன் நின்று புகைப்படம் எடுப்பார்கள். அப்படி எடுத்த ஒருவர் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டால் நானும் துணை என கூறாது முறைப்பாடு தாருங்கள் நடவடிக்கை எடுக்கப்படும்.

எம்.பி ஒருவரின் அரசியல் கட்சி பிரதி நிதி பிறிதொரு நபருக்கு காணி கொடுக்க மக்கள் தயார் என பிரதேச செயலாளருக்கு கடிதம் கொடுத்துள்ளார். ஆனால் அந்த மக்களுக்கு அந்த விடயம் தெரியாது. அந்த எம்.பிக்கும் தெரியுமோ தெரியாது. சுடலைக் காணியை கூட பிடித்து கொடுக்கிறார்கள். மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். காணி மற்றும் வீட்டுத்திட்டம் தொடர்பான விடயங்கள் பிரதேச செயலகத்தில் உள்ளன. அங்கு சென்று பார்வையிட்டு தங்களது விவரங்கள்இல்லையெனில்பதிவுசெய்யுங்கள். முகவர்களிடம் பணம் செலுத்தி ஏமாறாது அது தொடர்பில் மக்கள் விழிப்பாக இருங்கள். காணி ஆவணங்கள் கிடைப்பின் அது நீண்ட ஒரு நடவடிக்கை ஊடாகவே நடைபெறுகிறது. அது ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் பிரதேச செயலகம் முன்னெடுக்கும் நடவடிக்கை. எம்.பி மார் மற்றும் அரசியல்வாதிகளுக்கு பெயர் பெறுவதற்காக முகவர்கள் கூறுவது பொய் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (05)

# திருக்கோவிலிலும் இலவச அரிசி விநியோகம்





(வி.ரி.சகாதேவராஜா)

அரசாங்கத்தின் இலவச அரிசி விநியோக நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் தலைமையில் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

அரசால்குறைந்தவருமானம்பெறும்குடும்பங்களுக்கு இலவசமாக அரிசி வழங்கும் திட்டம் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடைமுறைப் படுத்துவதற்கு அரசாங்கம் தயாராகியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க அறிவித்திருந்தார்.

இவ்வாறு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவசமாக அரிசி வழங்கும் திட்டம் கடந்த ஆண்டும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி எஸ்.நிருபா, கிராம பொறுப்பான நிருவாக உத்தியோகத்தர் என்.கந்தசாமி, சமுர்த்தி பிரிவில் தலைமைபீட முகாமையாளர் எம்.அரசரெத்தினம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.(05)





# புத்தளம் உப்பு உற்பத்தியாளர் காணி ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு





(எம்.எச்.எம்.சியாஜ்)

புத்தளம் உப்பு உற்பத்தியாளர்களுக்கு சொந்தமான காணியை ஆக்கிரமிக்கசிலர்எடுக்கும்முயற்சிகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக கூறி பாரிய ஆர்ப்பாட்டம் திங்கட்கிழமை காலை உப்பு உற்பத்தியாளர் நலன்புரி சங்கத்தின் தலைவரும், முன்னாள் நகரசபை உறுப்பினருமானபீ.எம்.ரனீஸ்பதுர்தீன்தலைமையில் புத்தளம்மாவட்ட செயலகத்துக்குஅருகில்நடைபெற்றது. புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், யாழ். மாவட்ட முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் டாக்டர் ஐ.எம்.இல்யாஸ் உள்ளிட்ட உப்புஉற்பத்தியாளர்நலன்புரிச்சங்க அங்கத்தவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் இதில் கலந்து கொண்டனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# அபிவிருத்திக்கு ஜனாதிபதியுடன் கைகோர்த்தது போன்று அரசியல் தீர்வுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பு வரும்

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி நம்பிக்கை




அபிவிருத்தி விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தற்போது எடுத்துள்ள முடிவு போன்று அரசியல் உரிமைபிரச்சினைக்கானதீர்வுவிடயம்தொடர்பிலும் அவர்களிடம் மாற்றம் ஏற்பட வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்ததுடன் இவ்விடயம் தொடர்பில் மேலும் கூறுகையில் -

நாட்டை அபிவிருத்தி பாதையில் முன்னெடுத்து செல்வதற்கு தன்னுடன் இணைந்து பயணிப்பவர்களுக்கு மட்டும் தனக்காக ஒதுக்கப்பட்டுள்ள விசேட நிதியிலிருந்து ஒதுக்கீட்டை செய்து கொடுப்பதற்கு தான் தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணில் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் குறித்த கூற்றை ஏற்று தற்போது அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீட்டை தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்ட பலர் ஜனாதிபதியிடம் இருந்து பெற்றுள்ளனர். ஈ.பி.டி.பியினராகிய நாம் முன்னெடுத்தவரும்கோட்பாட்டையொத்த இவர்களது இந்த மாற்றம் வரவேற்கத்தக்கது. இதேநேரம் அவர்கள் அபிவிருத்தி தொடர்பில் எடுத்த இந்த நிலைப்பாடு போன்று அரசியல் தீர்வு விடயத்திலும் எடுக்க வேண்டும்.

ஏனெனில் நாம் நாடாளுமன்ற ஜனநாயக அரசியலில் காலடியெடுத்து வைக்க ஆரம்பித்த காலத்திலிருந்து மக்களின் அவசிய தேவைகள் முதலில் தீர்க்கப்பட வேண்டும் என்றும் அதனூடாக படிப்படியாக அரசியல் உரிமை குறித்து முன்னேற முடியும் என்று வலியுறுத்தி வந்திருந்திருக்கின்றோம்.

ஆனால் தமிழ் மக்களுக்கு அபிவிருத்தி தேவையில்லை. அரசியல் உரிமை கிடைத்தால் அபிவிருத்திகள் கிடைத்துவிடும் எனவும் தமிழ் மக்களுக்கு தற்போது அரசியல் உரிமை தான் வேண்டுமே தவிர அபிவிருத்திகள் அல்ல எனவும் ஊர் ஊராக முழக்கிமிட்டு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியாகிய எமது அன்றாட பிரச்சினை அபிவிருத்தி அரசியல் உரிமைக்கான தீர்வு என்ற ஜனார்த்தமான வழிமுறை செயற்பாடுகளுக்கும் அதனூடான எமது அரசியல் வழிமுறைக்கும் சேறுபூசி விமர்சித்து வந்திருந்தனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்.

இதேபோன்று கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி மீளமுடியாதென்று கைவிடப்படும் நிலைக்கு சென்றுகொண்டிருந்த இலங்கை தீவை ஜனாதிபதி ரணில் பொறுப்பெடுத்ததையும் தமிழ் தேசிய கட்சிகள் பல்வேறு கருத்துகளை நலினமாக சொல்லி விமர்சித்து வந்திருந்தனர்.

குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு உள்டளிட்ட பலரால் ஜனாதிபதி ரணில் தேசியப் பட்டியல் உறுப்பினராக வந்தவர் என்றும் இவர் மக்களின் ஆணையுடன் ஜனாதிபதியாக தேர்வு செய்யப்படவில்லை என்றும் இவரால் ஒன்றும் செய்துவிட முடியாதென்றும் பல்வேறு கருத்துக்களை சொல்லி விமர்சித்து தமது அரசியலை முன்னெடுத்திருந்தனர்.

ஆனால் இலங்கை அரசியல் சாசனப்படி அவரது தெரிவு முறைமை சரியானதாகவே இருக்கின்றது. ஆனால் இதை நன்கு தெரிந்திருந்தும் ஜனாதிபதி ரணிலின் மீது கடும் விமர்சனங்களை முன்வைத்த தமிழ் தேசிய கூட்டமைப்பினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள்தற்போதுதங்களுக்கும்நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீடு வேண்டும் எனவும் அதை வழங்குமாறும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

ஆனால் இந்த நிதி ஒதுக்கீட்டு விடயத்திலே ஜனாதிபதி மிகத் தெளிவாக ஒன்றைச் சொல்லி இருக்கின்றார்.

அதாவது நாட்டை அபிவிருத்தி பாதையில் முன்னெடுத்து செல்வதற்கு தன்னுடன் சேர்ந்து இணைந்து பயணிப்பவர்களுக்கு மட்டும் தனக்காக ஒதுக்கப்பட்டுள்ள விசேட நிதியிலிருந்து ஒதுக்கீட்டை செய்து கொடுப்பதற்கு தான் தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணில் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

அதனடிப்படையில் தமிழ்த்; தேசியக் கூட்டமைப்பும் குறிப்பாக யாழ்ப்பாணம் கிளிநொச்சியை பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினகளான சிவஞானம் சிறீதரன், சித்தார்த்தன் போன்றோரும் அதேபோன்று வன்னிப் பிரதேசத்தை பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், உள்ளிட்ட இன்னும் சிலரும் ஜனாதிபதியின் கருத்தை ஏற்று அவருடன் இணைந்து பயணிப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளமை போன்ற நிலைப்பாட்டுடன் நிதி ஒதுக்கீட்டை பெற்றுள்ளனர்.

தங்களுடைய கூட்டுக்குள் இருக்கின்ற குழப்பங்களால் மக்களால் ஒதுக்கப்படுவோம் என்ற அச்சத்தினால் எவ்வாறெல்லாம் விமர்சனங்களை முன்வைத்தார்களோ அந்த ஜனாதிபதியிடம் சென்று நாட்டின் அபிவிருத்திச் செயற்பாட்டுடன் தாமும் இணைந்து செயற்பட தமக்கும் அபிவிருத்திக்கான பங்கை தருமாறு கோரி பெற்றிருப்பது வரவேற்கக் கூடிய விடயமாக இருந்தாலும் அரசியல் தீர்வு விடயத்திலும்எம்மைப்போன்று அவர்கள் தெளிவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# லொறி - ஓட்டோ மோதி விபத்து

## யாழில் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாண நகரை அண்மித்த நாலுகால் மட சந்தியில் நேற்று (செவ்வாய்க்கிழமை)மதியம்இடம்பெற்ற விபத்துஒன்றில்ஓட்டோஒன்றுபட்டாரக வாகனத்துடன் விபத்துக்குள்ளாகி முற்றாக சேதமடைந்ததோடு ஓட்டோ சாரதி படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் - மானிப்பாய் - காரைநகர் பிரதான வீதியில் நாலுகால்மடம் சந்தியில் அமைந்துள்ள அரைக்கும் ஆலை ஒன்றில் இருந்து பிரதான வீதியில் முச்சக்கர வண்டி பயணிக்க தொடங்கிய நிலையில் பின்புறமாக ஆறுகால்மடம் பகுதியில் இருந்துவருகைதந்தபட்டாரகவாகனம் மோதியது.

இதன் போது ஓட்டோ முற்றாக சேதமடைந்தது. ஓட்டோவைச் செலுத்திய ஆறுகால்மடம் பகுதியைச் சேர்ந்த 20 வயதான அஜிந்தன் எனும் இளைஞன்படுகாயமடைந்தநிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதேவேளை பட்டாரக வாகனம் இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான மின்கம்பத்துடன் மோதி பகுதியளவில் சேதமடைந்த நிலையில் வாகன சாரதி காயங்களின்றி மீட்கபட்டார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த யாழ். மாவட்ட போக்குவரத்து பொலிஸார்மேலதிகவிசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவிக்கப் பட்டது.(05)

# புத்தளம் கல்லடியில் விபத்து மூன்று பேர் படுகாயமடைவு

(எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் - குருணாகல் பிரதான வீதியின் கல்லடி பிரதேசத்தில் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற வாகனவிபத்தில்மூன்றுபேர்படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புத்தளத்திலிருந்து ஆனமடுவ பகுதிக்குச் சென்ற லொறியுடன் ஆனமடுவ பகுதியிலிருந்து புத்தளம் நோக்கிச் சென்ற வான் மோதி விபத்துக்குள்ளாகியுள்ள நிலையில் வானிற்குப் பின்னால் சென்ற மோட்டார் சைக்கிள் லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தின் போது வானில் பயணித்தசாரதிஉட்படமூவரில்இருவர் பலத்தகாயங்களுக்குள்ளாகியநிலையில் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் .

ஒருவர்சிறுகாயங்களுக்குள்ளாகிய நிலையில்தனியார்மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் லொறியின் சாரதியும் பலத்தகாயங்களுக்குள்ளாகியநிலையில் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# ஈரான் ஜனாதிபதி இலங்கை வருகை: தலைநகரில் வரவேற்பு பதாதைகள்



(நூருல் ஹுதா உமர்)

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று இலங்கைக்கு வருகைதரவுள்ளார். அவரைவரவேற்று ஐக்கியசமாதானகூட்டமைப்பின்சார்பில் தலைநகர் கொழும்பில் வரவேற்பு பதாதைகள்காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

உமாஓயாபல்நோக்குஅபிவிருத்தி திட்டத்தை திறந்துவைக்கப்பதற்காக ஈரான் ஜனாதிபதி இலங்கைக்கு ஒரு நாள் உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

514 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் ஈரான் அரசாங்கத்தின் கடனுதவியின் கீழ் 2011 ஆம் ஆண்டு உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி நேற்று பாகிஸ்தானுக்கு சுற்று பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், பாகிஸ்தான் விஜயத்தை நிறைவு செய்து, நாளை நாட்டுக்கு வருகைதரவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அவரை வரவேற்று ஐக்கியசமாதானகூட்டமைப்பின்சார்பில் கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான ஐ. ஏ. கலீலுர் ரஹ்மான், எம்.காதர், எம்.முசம்மில் போன்றோர்களால் இந்த வரவேற்பு பதாதைகள்காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (05)

# தேசிய மக்கள் சக்தியின் தலைவர் உள்ளிட்ட குழுவினரை சீன கொமினிஸ் கட்சி சந்திப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சீனகொமினிஷ்கட்சி மற்றும் சீன கொமினிஷ் கட்சியின் பிரதி சர்வதேச விவகார அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்கா உள்ளிட்ட கட்சியின் உயர் பீட உறுப்பினர்களை கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் சந்தித்து உயர்மட்ட பேச்சில் ஈடுபட்டனர்.(05)



# அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டில் வாகன விபத்து





(அஸ்ஹர் இப்றாஹிம்)

அட்டாளைச்சேனைமீனோடைக் கட்டு பிரதேசத்தில் கனரக வாகனமொன்று பாலத்திற்கு அருகில் குடைசாய்ந்துள்ளது.

வேகமாகவந்தகனரகவாகனம் வீதியில் திடீரென மாடு ஒன்று குறுக்கிட்டதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனத்தில் பயணித்தவர்கள் சிறு காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (05)

# மார்ச்சில் பணவீக்கம் 2.5 சதவீதமாக வீழ்ச்சி

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்கு அமைவாக மதிப்பிடப்படும் நாடளாவிய ரீதியிலான பணவீக்கம் கடந்த பெப்ரவரி மாதம் 5.1 சதவீதமாகப் பதிவாகியிருந்த நிலையில், அது கடந்த மார்ச் மாதத்தில் 2.5 சதவீதமாக கணிசமான அளவால் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதன்படி பெப்ரவரியில் 5 சதவீதமாக மதிப்பிடப்பட்டிருந்த உணவுப்பணவீக்கம் மார்ச் மாதத்திலும் அதே மட்டத்தில் பேணப்பட்டிருக்கும் அதேவேளை, பெப்ரவரிமாதம்5.1 சதவீதமாகக் காணப்பட்ட உணவல்லாப் பணவீக்கம் மார்ச்சில் 0.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இக்காலப்பகுதியில் ஆடை, காலணி, தளபாடம், குடித்தன உபகரணங்கள் போன்ற உணவல்லாப்பொருள்களின் விலைகளும், நீர், மின்சாரம், எரிவாயு, உணவகங்கள், ஹோட்டல்கள் போன்றவற்றுக்கான கட்டணங்களும் பெருமளவால் குறைவடைந்துள்ளன.

அதேபோன்று தேசிய நுகர்வோர்விலைச்சுட்டெணின் பிரகாரம், பொருளாதாரத்தில் தளம்பல் அடையும் விலைகள், கட்டணங்களைக் கொண்ட உணவு, சக்திவலு மற்றும் போக்குவரத்து போன்றவை தவிர்ந்த ஏனையவற்றுக்கான மையப்பணவீக்கம் கடந்த மார்ச் மாதம் 3.4 சதவீதமாகப் பதிவாகியுள்ளது.

இது இவ்வாறிருக்க கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மதிப்பீட்டின்படி கடந்த பெப்ரவரி மாதம் 5.9 சதவீதமாகப் பதிவாகியிருந்த பணவீக்கம், மார்ச் மாதம் 0.9 சதவீதமாக பெருமளவால் வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.04.2024இல் வெளியிடப்பெற்றது